செ.வெ.எண்.367 நாள்.07.06.2018.

திருநெல்வேலி மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்க கிளை அலுவலகத்தில் சமுதாய நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட செஞ்சிலுவை சங்கத் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

-------

திருநெல்வேலி–பாளையங்கோட்டை மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்க கிளை அலுவலகத்தில் சமுதாய நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட செஞ்சிலுவை சங்கத் தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பேசியபோது–

திருநெல்வேலி மாவட்ட மக்கள் இனிமையானவர்கள். சமுதாய நல்லிணக்கத்துடன் உள்ளவர்கள். இந்த கூட்ட அரங்கில் அனைத்து சமுதாயத்தினர் கலந்து கொண்டு உள்ளதே இதற்கு எடுத்துக்காட்டு. மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தொழில் வளர்ச்சி அடைய வேண்டும். தொழில் வளர்ச்சிக்கு தனியார் முதலீடுகள் அதிகம் வரவேண்டும். தனியார் தொழில் தொடங்குபவர்கள் மாவட்டத்தில் தொழில் தொடங்குவதற்கான வளங்கலை ஆராய்வதுடன் சமுதாய ஒற்றுமையையும் பார்ப்பார்கள். சமுதாய நல்லிணக்கத்தின் மூலமே மாவட்டம் அனைத்து வகையிலும் வளர்ச்சி அடைய முடியும். சமூக ஒற்றுமைக்கு வழிவகுக்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், செஞ்சிலுவை சங்க சேர்மன் மரு.எம்.சார்லஸ் பிரேம்குமார், துணை சேர்மன் திரு.மரியசூசை, பொருளாளர் மரு.எம்.பிரேமசந்திரன், சாரதா குழுமத் தலைவர் சுவாமி.பக்தானந்தா மஹராஜ், எம்.ஒ.சி. நிர்வாகி திரு.கே.எம்.கபீர், பங்குத்தந்தை அந்தோணி குரூஸ் அடிகளார், ஆர்.ஆர்.இன். ஹோட்டல் உரிமையாளர் திரு.பொன்ராஜ், முக்கிய பிரமுகர் திரு.சைபுதின் ஜமாலி, மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.